*ஊனுயிர் 'நான்' உள வரைக்கும்*
*ஒருல க்ரசென்றே பாடி*
*மானுட நேசிப்பை வளர்ப்பேன்*
*மன்பதை புன்னகை பூக்கும்!*

# இருதயுகம்

## தமிழ்த் துவாசிகை

**1982/7**


ஆசிரியர்: **க. வீரகத்தி**
**280, பிரவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்,**
**இலங்கை.**


அவரவரின் கருத்துக்கு
அவரவரே பொறுப்பாளி;
வேண்டாதவற்றை
விலக்கிவிடும் உரிமை
ஆசிரியருக்கு உண்டு.

# இருதம் மலரட்டும்

இருதயுகம் காணுவோம் வாரீர் - தலை
கீழான உலகத்தை நேராக்கி வைப்போம்!

புனிதமுறு சிந்தனைகளோடு - மிகத்
துரிதநடை போட்டிடும் செயலாற்றலோடும்

இருதயுகம் காணுவோம் வாரீர் — தலை
கீழான உலகத்தை நேராக்கி வைப்போம்!

சத்தியம் செங்கோல் செலுத்தட்டுமே — பொது
சமதர்ம நீதிகள் வலுக்கட்டுமே
நித்தியம் மானுடம் பூக்கட்டுமே — இனிய
நினைவுகள் வாசனை வீசட்டுமே!

கண்ணீர் கதைசொல்ல வைக்காமல் — மனிதப்
புன்னகை காவியம் பாடவைப்போம்
எண்ணங்கள் போதனை செயற்பாடு — ஏக
சுருதியில் இயங்கிட அணிதிரள்வோம்!

எந்த மொழியகராதியிலும் — கேவலம்
ஏழையெனும் வார்த்தை ஒழியட்டுமே — இங்கு
வந்து பிறந்திட்ட மனிதமொட்டு — சோஷலிச
வசந்தக் கொடியிலே மலரட்டுமே!

இருதயுகம் காணுவோம் வாரீர் - தலை
கீழான உலகத்தை நேராக்கி வைப்போம்!

கவீ.


Universal Ora
196, SIR PONRAMANATHA
THIRUNELVELY
JAFFNA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திங்கள் உலா!

— பொன்மலர்

திங்கள் உலா வானில்
திரும்ப வருகிறது!
எங்கள் இதயங்களோ - எதையும்
இரசிக்கும் நிலையில் இல்லை!

வசந்த விழா ஏதுமிலா
வாழ்க்கைத் தொடர்கதையின்
கசந்த நினைவுகளின்
கனம் தாங்கா
எங்கள் இதயங்களோ - எதையும்
இரசிக்கும் நிலையில் இல்லை!

காவலர் என்னும் பேரில்
காக்கியுடை 'நாய்கள்' சில
கேவலம் எச்சிலைக்காய் - எம்மை
குதறிவிடப் பார்க்கையிலே
எங்கள் இதயங்களோ - எதையும்
இரசிக்கும் நிலையில் இல்லை!

'சிங்காங்" மலைத்தொடரில்
சீனப் பெரும் பரப்பில்
அங்கங்கே தன் ஒளியால்
அடிமை நிலை களைந்த

திங்கள் உலா இங்கே
தன் ஒளி பரப்பின் — பின்னே
எங்கள் இதயங்கள்
இரசிக்கும் நிலையிலிருக்கும்!

# பாரதிக்குச் சமர்ப்பணம்

செல்வன் இராஜரட்ணம் இரட்ணராஜ்

பாரதம் பெற்றெடுத்த
பா மகனே உன் புகழ் பாட
பா வாலே மலர் தொடுத்து
சமர்ப்பணம் செய்கிறேன்

பாட்டுக் கொரு புலவனுய்
பாரெல்லாம் புகழ் சூடி
பாமரர் நெஞ்சங்களில்
பாங்காக நிறைந்தவனே

ஆண்டுகள் நூறு கடந்தாலும்
அழியாதன உன் காவியங்கள்
சின்னஞ் சிறுவர் உள்ளங்களில்
சிதையாமல் நிற்கும் ஓவியங்கள்!

நிலவுப் பாடல்கள் பாடவைத்து
நிலவைப் பார்க்கச் சென்றனையோ
மண்ணுலகில் மீண்டும் வந்துதித்தே
மக்கள் எம் துயரினைப் போக்காயோ.

## சிரித்துக் கொண்டார்கள்......

பஸ் நடத்துநர்! ஆராவது ரிக்கற் எடுக்காதவர்கள், ஆராவது ரிக்கற் எடுக்காதவர்கள் என்று தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருந்தார்.

பிரயாணி: மிச்சக்காசு வாங்காதவர்கள் ஆராவது ஆராவது இருந்தால் அதையும் இப்படி இப்படி கேட்டுக் கொடுத்தால்.........

— சிவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரோடு விண்ணாய்ப் பரந்த எம் பரனே.........

செ. யோகநாதன்

கிருஷ்ணபிரானுக்கு அதிகாலை நான்கு மணிக்கு நித்திரையை விட்டெழுவது சிறு வயதிலேயே தகப்பன் பொன்னம்பலத்தினால் கற்பிக்கப்பட்ட ஒன்று. அந்தப் பழக்கம், இப்போது அவனுக்கு மிகவும் உதவியான வழக்கமாகி விட்டது. சனட்டோரியத்திற்கு தகப்பனிடம் செல்லும் காலத்திலும், இப்போது அதிகாலையிலே உறக்கம் கலைந்து தேவாரங்களை மனங்கசிந்துருகப் பாடிக் கொண்டிருக்கின்ற தகப்பனாரைக் கோயிலுக்கு அழைத்துச் செல்வதற்கும் இப்பழக்கம் மிகவும் ஒத்தாசை செய்கின்றது.

பிள்ளையார் கோவிலின் கொடிமரத்தின் முன்னர் நின்று மணிக்கணக்காகத் தேவாரம் பாடிக் கொண்டிருக்கின்றார், பொன்னம்பலமாயிருந்து பொன்னர் என மரியாதையோடு அழைக்கப்படுகின்ற அவனது தகப்பன். சனடோரியத்தில் ஆறு மாதங்கள் வரை இருந்து விட்டுத் திரும்பி வந்ததின் பின்னர், பொன்னரின் குரல் சிறிது உடைந்து போய் விட்டதை கிருஷ்ண பிரான் உணர்கின்றானாயினும் அக்குரலின் நெகிழ்வு, கேட்பவரின் நெஞ்சைப் பிழிகின்ற உருக்கம், ஒவ்வொரு சொல்லினையும் அந்தச் சொல்லின் அர்த்தத்தோடேயே நெக்குருக உச்சரிக்கின்ற லயிப்பு... கேட்டுக் கொண்டிருப்பவரைத் தாரை தாரையாகக் கண்ணீர் விட்டு வெறுமை வெளியிலே உலவவிடுகின்ற மந்திரசக்தி... 'ஐயா, உன்னால் எப்படி இவ்வளவு நோய்க்குள்ளும் இப்படித் தோய்ந்து போய்ப் பாடமுடிகின்றது?' கண்ணீர் மல்க நினைத்துக் கொள்வான் கிருஷ்ணபிரான்.

சந்தணத்தை அரைத்து உடலெல்லாம் பூசிக் கொண்டு கமகமக்கின்ற தகப்பனை மீண்டும் அழைத்துக் கொண்டு வீடு திரும்புகையில், வழியெல்லாம் தேவார திருவாசகங்கள் தான். பொன்னரைக் கண்டால், சத்தமிடுகிற இடமெல்லாம் மௌனம் அவ்வேளையில் மெலிதாக வடிவங் காட்டும்; ஒரு மரியாதை; பணிவான தலையசைப்பு அது. கோவிலிலே புராணத்திற்கு உரை சொல்கிற போது காணுகிற அதே வடிவம் தான் வீதியிலும், வீட்டிலுமென ஒன்றித்திருந்தமையால் வந்த கௌரவம் அது.

பூவரச மரத்தடியில் பொன்னர் சிறிது நின்றார்; கண நேரந்தான். அந்த உடலைக் குலுங்கவைக்கிற இருமல். தளர்ந்து சுருங்கிய தேகம் தொய்ந்து ஆட, கண்கள் சிவந்து கண்ணீர் அரும்ப ஆற்றாமையோடு மகனின் தோள்களினைத் தாங்கி...'பாரோடு விண்ணாய்ப் பரந்த எம் பரனே...' என மூச்சிழுத்தவாறு தன் துயரங்களை இறக்கி வைத்து, தஞ்சம் அடைய விரும்புகிற மூர்க்கத்தனமான நம்பிக்கை...

சனடோரியத்தில் பெரிய பெரிய ஊசிகளைப் போட்டவாறே டொக்டர் கிருஷ்ண பிரானைப் பார்த்துச் சொல்லுவார்: "தம்பி, உம்முடைய தகப்பனார் நோயின் ஆரம்ப நிலைமையிலை வந்திருக்கிறதாலை நோயைப் பற்றிப் பயமில்லை. இந்த நோயைச் சாப்பாட்டாலை தான் சுகப்படுத்த முடியும்!"

சின்னதொரு தோட்டக்காணி தான் பொன்னருக்கு சொந்தமானது. அதை செல்லண்ணன் பார்க்கிறார். நியாயமான குத்தகை. அதில் தான் கிருஷ்ணபிரானது படிப்பும், அவர்களின் வாழ்க்கையுமிருந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தது. பொன்னர் சனடோரியத்திற்குப் போனதின் பிறகு, பிரச்சினைகள் புதிதாய் முளைக்க ஆரம்பித்தன...

பொன்னர் சிறு வயது முதல் மானி. விறைத்த தன்மையினுல் பலரது எரிச்சலுக்கு ஆளானவர். அவ்வூரின் பிரமுகர் ஒருவரை 'வாழ்த்துப் பாடல்' பாடி வரவேற்க ஒரு சந்தர்ப்பம் அவரை வலிந்து தேடி வந்த போது, தனது அருவருத்த பார்வையினுலேயே அதனைப் பதுங்கிப் பின் வாங்க வைத்தவர். அந்தப் பிரமுகர் இப்போது எம்.பி ஆகி விட்டார்.

உதய கால வெய்யில் உடம்பை இதமாகச் சுட்டது. பலாவடி முடக்கத்திலுள்ள வைரவ கோயிலடியில் பொன்னர் சிறிது தரித்தார். தேவாரம்.

கிருஷ்ணபிரான் வீதியைப் பார்த்த படி நின்ருன். பார்வை சற்றுக் கூசியது. வந்து கொண்டிருப்பவன் குமார்.

''கிருஸ்ண, இதில் வெட்கம் ஒன்றுமில்லை. அரசாங்கம் எங்களின்ரை வரிப் பணத்திலை தான் நடக்குது. சனடோரிய றிப்போட்டை கொண்டு போய், ரவுண் டொக்டரிட்டை காட்டினுல், அவர் உம்முடைய ஐயாவையும் பார்த்து விட்டு, சமூக சேவைப் பகுதிக்கு நிலைமையை எழுதினுல் மாதா மாதம் உம்முடைய ஐயாவுக்கு அரசாங்கம் நிச்சயமாக உதவிப் பணம் கொடுக்கும். இதுவும் ஒரு ஆறுதலாயிருக்கும்...''

நன்றியோடு குமாரைப் பார்த்தான் கிருஸ்ணபிரான்.

''குமார், அது சரி தான்; ஐயா சம்மதிக்க வேணுமே...''

''நான் சம்மதிக்கப் பண்ணுறன்''...

ஒரு வழியாக பொன்னர் சம்மதிக்க, குமாரும், கண்ணபிரானும் பொன்னரைக் கூட்டிக் கொண்டு நகரத்திற்குப் போயினர். டொக்டர் ஒரு நிமிசத்தில் பரிசோதனையை முடித்தார். 'போகலாம்' என்றது பார்வை. குமார் கஷ்டத்தை விளக்கினுன். டொக்டர் அத்தட்டலாக 'போகலாம்' என்று கூறி விட்டு, அவரே உள் அறைக்குள் போய் விட்டார். மூவரும் திகைப்பில் உறைந்து போயிருக்கையில், அட்டென்ரன் உள்ளே வந்து, ''சரி, இனி ஐயாவை வீட்டை போய்ப் பாருங்க. அடுத்த மாசமே காசு வரும்'' என்ருர். பிறகு விஷயத்தை விஸ்தாரமாகக் கூறினுர். 'இரண்டு மாத உதவிக் காசை கொடுத்தால் றிப்போட் உடனே போகும். இல்லாவிடில் ஆறு மாதமோ, ஒரு வருசமோ? அதை விட இது பறுவாயில்லைத் தானே...' அற்றெண்டனும் போய் விட்டார்.

பொன்னர் சீறியெழுந்தார். 'வாருங்க... இனி இந்தப் பக்கமும் வரப்படாது...'

அதன் பிறகு குமாரை இப்போது தான் காண்கிருன் கிருஷ்ணபிரான். பொன்னரைப் பார்த்த குமார், ''எப்பிடி அப்பு சுகம்?'' என வாஞ்சையோடு கேட்டான். பொன்னர் மலர்ந்து சிரித்தார். ''காவோலையடா தம்பி...''

2 —

மீண்டும் அந்தக் கதையினை குமார் தயங்கியவாறே கிருஷ்ணபிரானிடம் கூறத் தொடங்கிய போது அதை ஆர்வத்தோடு கேட்டான். வீட்டு நிலைமை அவ்வளவு மோசமாகியிருந்தது. சரியான ஊட்டமில்லாததினுல் பொன்னர் எலும்புந் தோலுமாகி விட்டார். கடைசியில் கிருஷ்ணபிரான் சம்மதித்தான். குமாரோடு நகரத்துக்குச் சென்ருன். இப்போது ராசதுரை என்ற புதிய அற்றெண்டன் அவரிடம் டொக்டரின் வீட்டைக் கேட்ட போது, முதலில் தன்னைக் கவனிக்கச் சொன்னுர். கவனித்து முடிய ஒரு பக்கற் பிறிஸ்டல் சிகரெட்டையும் அவர்களைக் கொண்டு வாங்கி தனது சட்டைப் பைக்குள் வைத்துக் கொண்டார். டொக்டர் சந்தோஷமாக அவர்களை வரவேற்று, தாராளமாகக் கதைத்தார். இப்படி ஒரு றிப்போட்டை எழுதுவதிலுள்ள சிக்கல் சிரமங்களை விபரித்து, 'எங்கடை சனத்திற்காக நான் இதைத் துணிந்து செய்கிறன்' என்று கூறி முடித்தார். குமார் என் வலப்பை நீட்டினுன். ''நான் இதெல்லாம் கையாலை தொட மாட்டன். மேசையிலை வையும்'' என்ருர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமார் மேசையிடம் பயபக்தியோடு கொடுத்தான்:

இரு வாரங்கள் கழிந்தன. ஒன்றும் நடக்கவில்லை. சமூக சேவைப் பகுதிக்கு கிருஷ்ணபிரானும் குமாரும் சென்றனர். ஆணையாளரிடம் ஒரு வாறு சென்று நடந்ததைச் சொன்னுர்கள். பைல் நம்பரையும் கூறினுர்கள். பைல் வர வில்லை. பைல் வந்ததின் பிறகு, நிலைமையை நேரில் பார்த்து வர அதிகாரிகள் வருவார்களெனச் சொல்லி விட்டு அவர் கூட்டத்திற்குப் போய் விட்டார். தூறும் மழையில் நனைந்தவாறு, கனத்த ஏமாற்றத்தோடு இருவரும் வீடு திரும்பினுர்கள்.

பொன்னர் நடக்கும் வலுவையும் இழந்து, வீட்டுத் திண்ணையில் அடைக்கலமானுர். தேவாரம் பாடுகையில் விழியிலிருந்து கண்ணீர் தாரை தாரையாய் ஓடிற்று... கிருஷ்ணபிரான் பள்ளிக் கூடத்திற்குப் போகாமல், தகப்பனுருக்குப் பக்கத்திலேயே இருந்து வரலானுன்...

ஆறு மாதங்கள் கழிய வாட்ட சாட்டமான ஒரு அதிகாரி பொன்னர் வீட்டிற்கு வந்தார். நூற்றெட்டுக் கேள்விகள் கேட்டார். ''இவளவு காலமாகியும் ஏன் நோய் சுகமாக வில்லை?'' என்றவர் இரங்கிய குரலில், ''உம்மைப் பார்க்க கவலையாய்த்தான் இருக்குது, நானும் றெக்கமண்ட் செய்யிறன்... உங்களுக்கு எம். பி. பழக்கமோ?'' என்றுர்.

கிருஷ்ணபிரான் பரிதாபகரமாக அந்த அதிகாரியைப் பார்த்தான். பிறகு எம். பிக்கும் தகப்பனுருக்கும் உள்ள தகராறைச் சொன்னுன். அதிகாரிக்கு கோபம் வந்துவிட்டது. ''எம்.பி யைப் பகைச்சால் என்ன செய்ய முடியும்? எம்.பி யின்ரை ஒரு லெற்றர்— அல்லது அவர் ரெலிபோன் பண்ணினுரென்றுல் ரெண்டு நாளிலை காசை எடுத்திடலாம்; இப்ப என்ன செய்யிறது?... வயது போன ஆக்களுக்கு இப்பிடித் தான் மூளை மாருட்டம். என்னவோ முயற்சி பண்ணிப் பாரும்...''

அவர் போய்விட்டார். பொன்னர், பாரோடு விண்ணுய்ப் பரந்த பரனிடம் விண்ணப்பம் செய்துகொண்டிருந்தார்.

3 —

குமார் சொன்னதைக் கேட்டதும் எம். பி. யின் கண்கள் கனன்று சிவந்தன. பருத்த உடல் ஆத்திரத்தில் நடுங்கி ஆடிற்று. வெளி விருந்தையில் தனியனுக நின்ற கிருஷ்ண பிரானை நோக்கி உள்ளேயிருந்து சீறிக் கொண்டு வந்தார் எம். பி.

''துரோகியள் என்ரை வீட்டு வாசற்படியிலும் ஏறக்கூடாது... என்ன துணிவிலை என்ரை வீட்டுக்கு நீ வந்திருக்கிருய்?'' கிருஷ்ணபிரான் நடுங்கிக்கொண்டு நின்முன்.

''எங்களின்ரை இனம் இப்பிடித் தாழ்ந்துபோ யிருக்கிறதுக்கு என்ன காரணம்? இப்பிடியான துரோகிகள்தான். துரோகிகளுள்ளவரை எங்களுக்கு விமோசனம் வராது...''

கிருஷ்ணபிரானுக்கு எதுவுமே விளங்கவில்லை. அவர், வேறு யாரோ என நினைத்து தன்னைத் திட்டுகிருரோ என்ற ஐயம் அவனது நெஞ்சிலேயே தோன்றிற்று. சனடோரியத்தை விட்டு தனது தகப்பனுர் வெளியே வந்து ஒரு வருஷமானபோதிலும், முயற்சியைக் கைவிடாத குமார் அழைத்தமையால் தகப்பனுருக்கு தெரியாமல் அவன் எம். பியிடம் வந்திருக்கிருன். இங்கு வந்தாலோ?

மெல்லக் கூறினுன் அவன்;

''ஐயா, நான் தேவாரப் பொன்னரின்ரை மகன். நீங்கள் என்னை யாரோவோ என்று நினைச்சிட்டீங்களோ?''

மீண்டும் எம்பினுர் எம். பி.

''நீரென்ன எனக்கு ஒன்றும் தெரியாதென்று நினைச்சீரோ? என்ரை தொகுதியிலை உள்ள ஈ எறும்பைக்கூட எனக்குத் தெரியும். பொன்னர் மாற்றுனுடை சேர்ந்து என்னை மரியாதையீனப்படுத்தினதை நான் மறப்பேனென்றே நினைத்தீர்?''

குமார் எவ்வளவோ சொல்லியும் எம். பி. மனம் இரங்கியதாய்த் தெரியவில்லை. பரிதாபமான முகத்தோடு, கிருஷ்ணபிரானையும் அழைத்துக்கொண்டு வெளியே இறங்கி நடந்தான் குமார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4 —

பொன்னருக்கு நாக்கு மடங்கத் தொடங்கிவிட்டது. முன்புபோல அட்சர சுத்தமாக அவரால் பாடமுடியவில்லை. வயிறு எவ்வி, கண்கள் பஞ்சடைந்து கண்ணீர் சோரக் கிடந்த தகப்பனைப் பார்க்கப் பார்க்க இதயம் துடித்து வெதும்பியது கிருஷ்ண பிரானுக்கு. ஊர் மக்கள் இடையிடை பொன்னரைப் பார்க்க வருவார்கள். தோடம்பழமோ எதுவோ சக்திக்கெட்டிய வரை கொடுத்துவிட்டுச் செல்வார்கள்.

கிருஸ்ணபிரானுக்கு தனது தகப்பனுக்கு நல்ல சாப்பாடு கொடுக்க வசதியில்லையே என்ற கவலைதான் நெஞ்சை அறுத்துக் கொண்டிருந்தது. அரசாங்கத்தின் உதவிப் பணம் கிடைத்தால் சிறிதளவாவது உதவியாயிருக்குமே என அவனது மனம் அங்கலாய்த்தது. ஆனால் இனி அது சாத்தியமாகுமோ என அவனது உள்ளுணர்வு அவனை ஏளனமாக வினவிற்று. பொன்னரைப் பொறுத்தவரை அவருக்கு ஒரு பரம சிவனையே தெரியும், அவர் தேவாரத்தால் பாராயணம் செய்கிற பரன் அவன், ஆனல் வெளியே ஒவ்வொரு சந்தியிலும், அலுவலகங்களிலும் எத்தனை பரமசிவன்கள்? அந்தச் சிந்தனை துணுக்கென மனதினுள் தோன்றிய போது கிருஷ்ணபிரானுக்கு பக்கென்று சிரிப்பு வந்தது. சிரித்துவிட்டு தன்னைச் சுதாரித்துக்கொண்டு தகப்பனைப் பார்த்தான். நித்திரைத் திரையினுள் அவர் ஆழ்ந்தடங்கிக்கிடந்தார்.

என்ன வாகான உருவம் அவருடையது! விரிந்த தோள். ஆஜானுபாகுவான தோற்றம். சின்னச்சின்னச் சுருளான தலைமுடி. திருநீறேடு தோழமை கொண்ட நெற்றி. கடுகடுப்பையறியா முகம். எந்தக் கல் நெஞ்சனையும் வாஞ்சையான கைகளாகி வருடி இருத்தி நெகிழ்வுற வைக்கின்ற அந்தக் கணீரென்ற குரல்வளம்.

கிருஷ்ணபிரானின் கண்கள் நனைந்தன.

இப்போது வீசியெறியப்பட்ட மலர் மாலைச் சருகின் எஞ்சிய நாராகித் தளர்ந்து போய்க் கிடக்கிலேற எலும்பும், தோலும்!

'இந்த மனிதனையா துரோகி எனவும், மாற்றுனின் கைக்கூலி எனவும் இகழ்வது? சீ, என்ன மனிதர்கள்!'

காறியுமிழத் தோன்றிற்று கிருஷ்ண பிரானுக்கு. எழுந்து வெளியே வந்தான். குமார் வந்துகொண்டிருந்தான்..

குமார் மிகுந்த மகிழ்ச்சியோடு காணப் பட்டான். கிருஷ்ணபிரானைக் கண்டதும் அந்தக் கடிதத்தை நீட்டினன். எம்.பி.யின் கடிதம். ''அன்று நான் ஆத்திரத்தில் பேசி விட்டேன். தொகுதி மக்கள் எனது பிள்ளைகள். பிள்ளைகளைத் தகப்பன் பேசுவதில்லையா? 8-ம் திகதி காலை 10 மணிக்கு தேவாரப் பொன்னரின் மகனேடு சமூகசேவைப் பகுதியில் என்னை வந்து சந்திக்கவும். உடனேயே பணம் பெறுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. பொன்னருக்கும் நிதிதிரட்ட எண்ணியுள்ளேன். எமது சமயத்தை நாங்களே பேணவேண்டும்...'' என்ருர் எம். பி.

குமார் கிருஸ்ணபிரானின் முதுகில் மகிழ்ச்சியோடு தட்டினன். ''எட்டாந் திகதி நேரத்தோடை பஸ் எடுக்கவேணும்...''

5 —

''சமூகசேவைப் பகுதியினர் அரைமணித் தியாலத்தில் பொன்னர் உதவிப் பணம் பெறுவதற்குரிய 'கார்ட்'டை எம்.பி.யின் கையிலே கொடுக்க, எம்.பி. அதை கிருஷ்ண பிரானிடம் கொடுக்க, அவன் அதை மிகவும் நன்றியோடு வாங்கிக்கொண்டு கும்பிட்டான்; மனமே கைகளாய்க் குவிந்த கும்பிடு.

தோடம்பழம், ஹார்லிக்சை வாங்கிய குமார், ஏதோ நினைத்தவனய் ஒரு தினசரியையும் வாங்கிக்கொண்டு பஸ்ஸினுள் ஏறினன். பஸ் புறப்படுகையில், குமார் பத்திரிகையை விரித்தான். கொட்டை கொட்டையான எழுத்துக்களில் பத்திரிகை சத்தமிட்டது... 'ஒரு வாரத்தில் பாராளுமன்றம் கலைக்கப்படும்! மூன்றுமாதங்களின் பின்னர் பொதுத்தேர்தல் நடைபெறும்!!' குமாருக்கு மனதுள் ஏதோ கசந்தது. குமார் அவனை திரும்பிப் பார்த்தான்: அவன் அந்த மாதாந்தப் பணம் பெறுவதற்கான 'கார்ட்'டை வெகுஅவதானத்தோடு பார்த்துக்கொண்டிருந்தான்......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதிதரிசனம் — க.வி.

## 1. இயற்கை வெடித்த கவிஞன்

**வாணி:** தமிழ்க்கவிதை நறுஞ்சுனையில் பீறியெழும் பாலூற்று
புத்தெழுச்சிப் பிரவாகம் புதியதொரு கவியூற்று
அமுதமொழி ஆழியிலே சுழியோடி எடுத்த
ஆணிமுத்து மொழிகளிலே அமரயுகக் கீதம்!

சக்திபரா சக்திகைத் தாங்கலிலே மனிதம்
சக்தியுற்றுச் சமதர்ம நெறியோடி மிளிரும்
உத்வேகம் சத்தியத்தில் ஒளிவிட்டுப் பாய
உலகமகா கவியான பாரதியை உணர்வோம்!

இயற்கை வெடித்திட்ட மகா கவிஞர்கள் இருவர்
இராமன் பாஞ்சாலி கதைக் காவியர்கள் இவர்கள்!
இயற்கை வெடிப்புகள் கண்டு எரிமலைபோல் குமுறி
எழுச்சிதரும் சிந்தனைகள் இசைத்தவன் பாரதியே!

## 2

**ராணி:** பஞ்சப் புலன்களுக்கும் பால்வார்த்துத் தினலூட்டி
நெஞ்சுக்கு ஆகாரம் ஏதும் கொடுக்காமல்
பாழடிக்கச் செய்துபடு மரமாகி வாழ்ந்தவர்கள்
ஆளவந்த துரைகளுக்கு அட்டாங்க நமஸ்காரம்
போட்டுத் துதிபாடிச் சுகபோகம் கண்டுகொண்ட
மேட்டுக் குடியினர்க்கும் அடிமைவிசு வாசிகட்கும் —

மானுடமாய்ப் பிறந்த தவறுக்குத் தண்டனைபோல்
மாடாகி உழைத்தாலும் மரணபரியந்தம்
அரைவயிற்றுக் கஞ்சிக்கும் அன்றாடம் நாதியற்று
அற்றம் மறைப்பதற்கும் சுற்றுதுணி சாணுமின்றி
பூமிஅருகு இருந்தாலும் 'பொருட்படுத்தல்' அறியாமல்
தேவதைகள் தெய்வங்கள் வாழும்இடம் என்பதனால்
வானம் நெடிதிருந்தும் வானத்தையே நோக்கி
ஊனம் உருக்குலைந்த உழைப்பாளிப் பிறவிகட்கும் —

**வாணி:** சங்கொன்றே ஊதினான்! முரசொன்றே இயம்பினான்!
எங்கும் பெருவிழிப்பு! எதிலும்ஒரு புதுப்பார்வை!
மங்கிவிட்ட இதயத்தில் தீயகத்தைப் பாய்ச்சினான்
மரணம் மரணிக்கக் கண்விழித்தார்! மனிதர்கள்தான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3

ராணி: பாரதிக்குப் பின்னுலே பாரிய கவிஞன்என
ஆரவாரப்படுத்தும் கண்ணதாசனைப் போல
'குமுதம் கலாச்சாரம்' குளுகுளெனக் கொழுப்பெய்த
கொஞ்சு மொழிகளிலே குமிழிவிடும் தொடர்களிலே
அமுதுக்குள் நஞ்சளித்த அங்காடித்தனம் இல்லை
வேதனையை விரக்தியை நியாயப் படுத்துகின்ற
வேதாந்த தத்துவ விளாசல்களும் இல்லை
களிம்புற்றுக் கயமைக் குணமுற்ற உயர்திணைகள்
பளிங்குபோல் விகசிக்க வாணுளைப் பரிசளித்து
நாதாந்த சுருதியாய் மனிதமே உயிர்ப்புவிட
'நல்லியல் கவிஞன்'என நமதுகம்பன் சொன்னதற்கு
எல்லையற்ற சான்ருேன்! சால்புக்கு இலக்காளுன்!

---

# புத்திசாலிக் கிழவன்

பாடுபட்டு நிறையப் பொருள் சேர்த்த அவன் ஒரு விவசாயி. ஒரே ஒரு மகனைச் சீரோடும் சிறப்போடும் கட்டுப்பாடாக வளர்த்து வந்தான். வளர்த்தால் ஆயிற்ரு? தாயில்லாப் பிள்ளையான அவனுக்கு ஒரு நல்ல மனைவியைத் தேடித்தரும் பொறுப்பும் கிழவனுக்கே சேர்ந்தது. சதா அதே யோசனை.

வீட்டை நன்கு பராமரிக்கவேண்டும். ஆளுக இருந்தாலும் அவன் அதில் வெகு துடி: ஒரு குப்பை! ஊ ஹீ ம் பேசக்கூடாது. சோம்பலைப் பார்க்காமல் ஒதுக்குப் புறமாகக் கொண்டுபோட்டுத்தான் மறுவேலை. ஆக அவன் வீடு எப்போதும் மன நிறைவைத் தரும் விதத்தில் இருக்கும்.

மருமகளும் அப்படி வாய்க்க வேண்டுமே!

ஒருநாள் அவன் வயலிலிருந்து வந்ததும் வீட்டுக்கு வராமலேயே அடுத்த ஊருக்குப் போய்விட்டான். அவனை அந்த ஊரில் யாருக்கும் தெரியாது. போனவன் அந்த ஊரில் குப்பை கூளம், ஒட்டடை, கந்தல் இருந்தால் போடுங்க... காசு தாரேன் கையிலே! என்று வண்டியை ஓட்டியபடி குரல் கொடுத்தான்.

ஊருக்கெல்லாம் ஒரே ஆச்சரியம்!

குப்பை கூளம் ஒட்டடை கந்தல் கசகேடுகளைக் காசுகொடுத்து ஒருவன் வாங்கவாவது?

உண்மைதான் என்று தீர்மானமானதும் அவசர அவசரமாக வீட்டைச் சுத்தம் செய்து குப்பை கூளங்களைக் கூடைகூடையாகச் சேர்த்துக் கொண்டு வந்து கொட்டிக் காசு வாங்கிச் சென்ருர்கள்.

ஒருத்தியின் வீட்டில் மட்டும்...... பாவம்! குப்பையே சேரவில்லை. அவள்தான் தினமும் கூட்டிப் பெருக்கி ஒட்டடை அடித்து வீட்டைச் சுத்தம் செய்பவளாயிற்றே!

கிழவன் அவளைக் கூப்பிட்டு விபரம் தெரிந்து கொண்டான். ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த அவளுக்கு அழகே உருவான மகள் வேறு இருந்தாள். கிழவன் கெட்டிக்காரன்தான்! அவளைத் தன் மகனுக்கு மணம் முடித்துப் பணக்காரியாக்கி நிம்மதி அடைந்து ஊரார் வயிற்றெரிச்சலைக் கட்டிக் கொண்டான்.

அனுப்பியவர்: **நவநீதன், கொழும்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடலால் எரிந்தது கூடல் மாநகர்

அகளங்கன்

சித்திரை மாதத்துச் சித்திரை நட்சத்திர நாள். பூம்புகார் நகரத்தில் இந்திர விழா சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்திர விழாவிலே இனிய தமிழிசையை யாழில் வாசித்து கானல்வரி பாடிக் களித்துக்கொண்டிருக்கின்றனர் கோவலனும் மாதவியும். இடையே கானல்வரிப் பாடல்கள் இருவருக்கும் கலகத்தைத் தொடக்க,

''கானல் வரி யான்பாட தான் ஒன்றின்
மேல் மனம் வைத்து
மாயப் பொய் பல கூட்டும் மாயத்
தாள் பாடினாள்''

என மாதவியோடு கோபங் கொண்டு பிரிந்து செல்கிறான் கோவலன்.

மாதவியைப் பிரிந்து கண்ணகியின் வீட்டிற்கு வந்த கோவலனை நகைமுகம் காட்டி வரவேற்கிறாள் பத்தினியான கண்ணகி. உத்தமியாய், பத்தினியாய், மாசறு பொன்னாய், வலம்புரி முத்தாய், காசறு விரையாய், கரும்பாய், தேனாய் இனித்த கண்ணகியைக் கலங்கவிட்டு மாதவியின் ஆட்டத்திலே அபிநயத்திலே அழகிலே மயங்கி அவளோடு இல்லறம் நடாத்தச் சென்ற கோவலனை வேறுயாராவது பெண்ணாக இருந்திருந்தால் நகைப்புக்கிடமான காரியம் செய்தான்என்று நகைத்து வெறுத்திருப்பார்கள்.

ஆனால் கண்ணகியோ, இளநகை சிந்தி, இன்முகங்காட்டி, புன்சிரிப்போடு மகிழ்ச்சியாக வரவேற்கிறாள். அவளது கற்புத் திண்மையைக் கண்ட கோவலன் மனங் கலங்கி தனது தவறுகளை உணர்ந்து தானே தன்னை நகைத்துக்கொள்கிறான்; கண்ணகியின் வாடித்தளர்ந்த மேனியின் வருத்தங் கண்டு யாவும்.

''சலம் புணர் கொள்கைச் சலதியொடு
ஆடி;
குலம் தருவான் பொருள் குன்றம்
தொலைத்த
இலம் பாடு நாணுத் தரும் எனக்கு''

என்று கூறுகிறான்: நிலையில்லாத கொள்கையை உடைய பெண்ணான மாதவியோடு வாழ்ந்து எனது குலத்திலே வழிவழிவந்த மலைபோன்ற பொருட் செல்வங்களை இழந்து விட்ட செயல் எல்லோராலும் கேலி பேசி நாணத்தக்க செயல் ஆகும் என்று மனம் கலங்கி வெட்கப்படும் கோவலனை;

''நலம் கேழ் முறுவல் நகை முகம் காட்டி'' வரவேற்கிறாள். அதுமட்டுமல்லாது இன்னும் பொருட்கள் முற்றாக அழிந்து விடவில்லையே இதோ சிலம்பு உள கொண்ம்'' என்று பொருள் பொதிந்த வார்த்தையைத் தருகிறாள். பொருள் இல்லாத் தன்மையால் புருஷனின் புன்னகை மறைந்து விடக்கூடாதே என்று நினைத்து இதோ சிலம்பு உண்டு என்கிறாள் கண்ணகி.

கண்ணகியின் பெருந்தன்மையைக் கண்டு மனம் திருந்தும் கோவலன் சேயிழை கேள்; இச்

''சிலம்பு முதல் ஆகச் சென்ற கலனோடு
உலந்த பொருள் ஈட்டுதல் உற்றேன்''

என மகிழ்ந்து கூறி கண்ணகியையும் அழைத்துக்கொண்டு மதுரைமாநகர் நோக்கிச் செல்கிறான். மதுரையிலே ஆயர்பாடியிலே மாதரியின் வீட்டிலே கண்ணகியை இருத்திவிட்டு கடைத்தெருப் பக்கம் செல்கிறான் கோவலன். கண்ணகியின் பாதத்தைத் தழுவி இருந்த பாதச் சிலம்புகள் இரண்டையும் விற்க அவனது மனம் இடம் கொடுக்கவில்லை. சோகம் மனதைத் தழுவ ஒற்றைச் சிலம்போடு மதுரை மாடவீதி நோக்கி நடக்கிறான்.

என்ன செய்வது இன்றுபோல அந்தக் காலத்தில் அடகு வைக்கும் வசதி ஏதும் இருந்திருக்கவில்லையே. அதனால் விற்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றேதான் வழி. அதுதான் அவனுக்குப் பழியாகவும் வருகிறது.

மிகவும் பெறுமதி வாய்ந்த அந்தச் சிலம்பை விற்க அரச தெருவிலே செல்கிறான். அங்கே கோவலனின் உயிரைக் கொண்டு போவதற்காக வந்த கூற்றத் தூதுவன் போல ஓர் பொய்த் தொழிற் பொற்கொல்லன், அவனிடம் தனது சிலம்பை விற்க முயல்கிறான் கோவலன்.

பொற் கொல்லனோ பாண்டிமாதேவியின் சிலம்பைத் தான் களவாடியது அரசனுக்குத் தெரிவதற்கு முதலே இடம்விட்டு இடம் வந்த இப்புதியவனின் தலையிலே பழியைப் போட்டுவிடுவதற்காகத் துடித்துக் கொண்டிருக்கிறான்.

''காவலன் தேவிக்கு ஆவதோர் காற்கு அணி
நீயிலை யிடுதற்கு ஆதியோ''

என்று கோவலன் கேட்க பொற் கொல்லனோ சமயம் சரியாக வாய்த்தது என்று சந்தோஷம் கொள்கிறான்.

''கரந்து யான் கொண்ட கால் அணி ஈங்கு
பரந்து வெளிப்படா முன்னம் மன்னற்குப்
புலம் பெயர் புதுவனிற் போக்குவன் யான்''

என்று மனதிலே திட்டத்தைப் போட்டுக் கொண்டு,

''கோப்பெருந் தேவிக்கு அல்லதை இச்சிலம்பு
யாப்புறவு இல்லை''

நான் சென்று அரசனிடம் சொல்லி வருகின்றேன் எனக் கூறிச் செல்கிறான் பொற்கொல்லன்.

அரசனிடம் சென்று கள்வனைக் கையோடு பிடித்ததாகக் கூறுகிறான். அரசனோ அந்த நேரத்தில் இருந்த நிலை ஆராயத்தக்க நிலையாகவே இருக்கிறது.

அரண்மனையிலே கூடல் மகளிரின் ஆடற் தோற்றத்தை ரசித்து மனம் பறிகொடுத்திருந்தான் பாண்டிய மன்னன். அது அவனது மனைவியான கோப்பெருந்தேவிக்குப் பிடிக்கவில்லை. அரசன் ஆட்டத்தை மட்டுமன்றி ஆடிய ஆரணங்குகளின் அழகையும் அனுபவித்து ரசிக்கிறான் என்று நினைத்து ஊடல்கொண்டு இடையிலே எழுந்து சென்று விடுகிறாள். தலைவலி என்ற ஒரு சாட்டைச்சொல்லி அந்தப் புரத்திற்குச் சென்று விடுகிறாள்.

தலைவியின் ஊடல் புரியாதவனா தலைவன். ஊடலைத் தணிக்கும் உபாயம் தேடிய உள்ளத்தவனாக அந்தப்புரத்தை அடைகிறான் பாண்டியன். அந்தப்புரம் செல்லும் அரசன் தனது மந்திரிகளையும் அரசியல் அறிஞர்களையும் நீக்கிவிட்டு தனியாகவே செல்கிறான். அரசியின் ஊடல் அரசாட்சியைச் செம்மைப் படுத்தும் அரசியல் அறிஞர்களான மந்திரச் சுற்றத்தாரை அரசனிடமிருந்து பிரித்து விடுகிறது.

''கூடன் மகளிர் ஆடல் தோற்றமும்
பாடற் பகுதியும் பண்ணின் பயங்களும்
காவலன் உள்ளம் கவர்ந்தன என்றுதன்
ஊடல் உள்ளம் உள்கரந்து ஒளித்து
தலைநோய் வருத்தம் தன்மேல் இட்டு
குலமுதல் தேவி கூடாது ஏக
மந்திரச் சுற்றம் நீங்கி மன்னவன்
சிந்தரி நெடுங்கண் சிலதியர்-தம்மொடு
கோப் பெருந்தேவி கோயில் நோக்கிக்
காப்புடை வாயிற் கடைகாண் அகவையின்
வீழ்ந்தனன் கிடந்து, தாழ்ந்து பல ஏத்தி.''

என நெஞ்சை அள்ளும் வகையில் இதனை இங்கே அழகாக நேர்த்தியாக சொல்கிறார் இளங்கோ அடிகள்.

மந்திரி பிரதானிகளை நீக்கி மனைவியின் ஊடலால் மனம் வாடி உள்ளம் பேதலித்து உணர்வு ஊசலாடிய நிலையில் நின்ற அரசனிடம் பொற்கொல்லன் வந்து சேருகின்றான். கோப்பெருந்தேவியின் சிலம்பைத் திருடிய கள்வனைப் பிடித்து வைத்திருப்பதாக கதை அளக்கிறான். தேவியின் ஊடலைத் தீர்க்க எல்லா வகையிலும் முயற்சிக்கிறான் பாண்டியன். தேவியினைத் தாழ்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிந்து பல இன்மொழிகளைக் கூறி ஏத்தி பலவாறாக முயன்றும் பலன் கிட்டாத நிலையில் தளர்ந்து நின்ற நிலையில் தான் பொற்கொல்லன் வந்து சேருகின்றான்.

களவு போன கால் சிலம்பு கிடைத்து விட்டது என்ற செய்தியை தேவி அறிந்தால் ஊடல் நீங்கும் என உளம் மகிழ்ந்த பாண்டியன் அவசர அவசரமாக காரியம் ஆற்றத் தொடங்கினான்.

கள்வனைத் தண்டிப்பதாயின் அதற்கு முறை உண்டு. நீதி விசாரணை என பல நடவடிக்கைகள் வேண்டும். ஆனால் இங்கே அவசரந்தான் முந்துகிறது. தேவியின் ஊடலைத் தீர்க்கும் அவசரம் அவனது மனத்தை முற்றாக ஆட்கொள்கிறது அவசரம் அனைத்தையும் பாழாக்குகின்றது.

மதுரைத் தெய்வமான மதுராபதி பின்னால் கண்ணகிக்குச் சொல்லும்போது பாண்டிய மன்னர் பரம்பரையை நீதிக்கென்றே பெயர் பெற்ற பரம்பரையாகக் கூறுகிறது முன்பு கொற்கையிலே மன்னனாக இருந்த கொற்கைப் பாண்டியன் ஊர்காவலின் போது கீரந்தை என்பவனின் மனைவியின் கற்பின்மேல் களங்கம் என்று எண்ணிக் கதவு தட்டி பின்னால் தான் செய்தது தவறு என்று புரிந்ததும் தனது கையைத் தானே தன் உடைவாளால் வெட்டிப் பழிதீர்த்துப் பொற்கையன் ஆன நீதிக் கதையைக் கூறுகிறது.

அதுமட்டுமன்றி இன்னொன்றையும் வெகு அழகாக சூசகமான முறையில் கூறுகிறது. சோழநாடு கண்ணகியின் நாடு. அங்கேதான் அரண்மனை வாயிலில் இருந்த ஆராய்ச்சி மணியை அடித்த ஆவின் துயர் தீர்க்க தன் அரும் பெறல் புதல்வனைத் தேர் ஆழியில் நெரித்துக் கொன்ற மனுநீதி கண்ட சோழனின் புகழ் அழியாமல் நிற்கிறது. அதனைக் கண்ணகியும் பாண்டியனிடம் பெருமையாகக் கூறுகின்றாள்.

''வாயில் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடை மணி உகுநீர் நெஞ்சு
சுடத் தன்
அரும் பெறல் புதல்வனை ஆழியில்
மடித்தோன்''

இதே விடயத்தை எதிர்மறையிலே மதுராபதி கூறுகிறது. சோழ நாட்டிலே ஒரு பசு மாட்டிற்காவது துயர் ஏற்பட்டிருக்கிறது. அதனால் அது அரண்மனையிலே இருந்த ஆராய்ச்சி மணியை அடித்திருக்கிறது. ஆனால் பாண்டிய நாட்டிலோ அப்படி எதுவுமே நடைபெறவில்லை. ஆராய்ச்சி மணி பாண்டிய நாட்டு அரண்மனை வாயிலிலும் இல்லாமல் இல்லை. அதாவது ஒரு பசு மாட்டிற்குக் கூட பாண்டிய நாட்டிலே துயர்வரும் வண்ணம் பாண்டியர்கள் அரசாளவில்லை. பாண்டிய நாட்டிலே கேட்கும் ஓசை மணி நா ஓசை அல்ல மறை ஓதுகின்ற மறை நா ஓசைதான் என்று அழகாக ஆழமாகக் கூறுகிறது.

''மறை நா ஓசை அல்லது; யாவதும்
மணி நா ஓசை கேட்டதும் இலனே;''

அத்தகைய வகையில் சிறப்பாக அரசாட்சி செய்து வந்த பரம்பரை பாண்டியன் பரம்பரை. அங்கேயும் தவறு நிகழ்கின்றது. எல்லாம் பாண்டிய மாதேவியின் ஊடல் செய்த பெருங்கேடு.

முன்னொரு கால் தனது மனைவியின் கூந்தலிலே இயற்கையிலா, செயற்கையிலா வாசம் வந்தது என்பதை அறிவதற்கே புலவர்களை ஆராயவிட்டு ஆயிரம் பொற்காசு பரிசும் கொடுப்பதாக அறிவித்து உண்மையைக் கண்டுபிடிக்க உத்தரவு பிறப்பித்தவன் செண்பகப் பாண்டியன். ஒருஅற்ப விடயத்திற்கே ஆராய்ச்சி செய்த செண்பகப் பாண்டியனின் பரம்பரையில் வந்த நெடுஞ்செழியப் பாண்டியன் நீதி தவறுகிறான்.

களவு நடந்துவிட்டது. அதுவும் கோப்பெருந்தேவியின் காற்சிலம்பு. களவு எடுத்தவனைப் பிடித்துவிட்டால் எப்படி களவு நடந்தது என்று ஆராய வேண்டாமா? அல்லது அதே களவுபோன பொருள்தான் மீண்டிருக்கிறது என்பதை உறுதி செய்ய வேண்டாமா? அவசரத்தில் ஆணையிடுகிறான் அரசன். காரணம் அரசியின் ஊடலால் மனம் நொந்து சுயநினைவிழந்து அரசன் இருப்பதுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உப்பமைந் தற்றால் புலவி அதுசிறிது
மிக்கற்றால் நீள விடல்''

என்பார் வள்ளுவர். உப்பு கூடிவிட்டால் உணவின்சுவைபோய்விடும் அதேபோல்தான் ஊடலும் நீடினால் உணர்வின் சுவை போய் விடுகிறது. ஊர் காப்பாளரைக் கூவி ஆணை யிடுகிறான். மந்திரிகள் நீதிபதிகள் விசாரித்துத் தீர்க்கவேண்டிய பிரச்சினை, ஊர்பாதுகாப்பளார்கையில் விடப்படுகிறது.

''ஊர்காப் பாளரைக் கூவி ஈங்கு என்
தாழ்பூங் கோதை தன் கால் சிலம்பு
கன்றிய கள்வன் கையது ஆகின்
கொன்று அச்சிலம்பு கொணர்க ஈங்கு''

என கொலைத் தண்டனையைத் தானே கொடுத்தும் விடுகின்றான். தேவியின் ஊடலைச் சுருக்கி கூடலைப்பெருக்க நினைத்த கூடல்ப் பெருமான் கொலைத் தண்டனையை கொடுத்தே விடுகின்றான்.

பாண்டிய மன்னன் உண்மையில் தனது அரண்மனையில் ஆடிய ஆரணங்குகளின் அழகிலே மயங்கவும் இல்லை. இதனைப் பின்னால் மதுராபதி கூறுகிறது.

''........ நன்னுதன் மடந்தையர்
மடங்கெழு நோக்கின் மதிமுகம் திறப் (புண்டு
இடங்கழி நெஞ்சத்து இளமை யானை
கல்விப் பாகன் கையகப் படா அது
ஒல்கா உள்ளத்து ஓடும் ஆயினும்
ஒழுக்கொடு புணர்ந்த இவ் விழுக்குடிப் (பிறந்தோர்க்கு
இழுக்கம் தாராது ..''

நல்ல அழகான பெண்களின் கருவிழிக் கணைகளால் நெஞ்சத்துக் காமம் எனும் மதம், மிகுந்து இளமை உணர்வாகிய யானை கல்வி அறிவாகிய பாகனின் வசப்படாது பெண்கள் மேல் வேட்கையுற்றுச் செல்லும் வழக்கம் உலகிலே இல்லாமல் இல்லை. ஆயினும் ஒழுக்கத்தோடு உயிர் கலந்த எங்கள் பாண்டிய மன்னன் அவ்வழியில் கூட தவறுவதில்லை. என்று மறைமுகமாக கோவலனின் தவறையும் பாண்டியனின் நிறைவையும் எடுத்துக் கூறுகிறது மதுராபதித் தெய்வம்.

இப்படியே தவறே இல்லாத பாண்டியன் மேல் பாண்டிமாதேவி ஊடல் கொள்கிறாள். வள்ளுவர் கூறுவார்;

''இல்லை தவறவர்க்கு ஆயினும் ஊடுதல்
வல்லது அவர் அளிக்குமாறு''

கணவனிடம் தவறு ஏதும் இல்லாவிட்டாலும் ஊடுதல் கணவன் இன்பத்தை கூடுதலாக அளிப்பதற்கு வல்லது என்று கூறுகிறார். இங்கேயும் இல்லை தவறு, ஆயினும் ஊடினாள் பாண்டிமாதேவி அது கோவலனை அழிப்பதற்கு வல்லதாக இருந்து விட்டது.

முடிவு ஆணைப்படியே வெட்டுண்டான் கோவலன். நீதி கேட்க வந்த கண்ணகி மதுரையை எரிக்கிறாள். கோப்பெருந்தேவியின் ஊடல் கூடல் மாநகரையே அழித்து விடுகிறது.

தொலைந்த சிலம்பு கிடைத்ததினால் கோப்பெருந்தேவியின் ஊடல் தீர்ந்துவிடுகிறது. அதனால் பாண்டிய மன்னன் சுய நினைவில் இருக்கிறான். அப்போது நீதி கேட்டு வருகிறாள் கண்ணகி. கண்ணகியை நேரே கண்டதுமே உண்மையை உணர்ந்து விடுகிறான்.

''காவி உகு நீரும் கையில் தனிச் சிலம்பும்
ஆவி குடிபோன அவ்வடிவும்''

கண்ட கூடலால் அப்போதே தவறை உணர்ந்து கூடாகிவிடுகிறான்.

அல்லவை செய்தான் பாண்டியன் என்றதும் அறம் கூற்றமாகி அழிவை விளைக்கிறது. ஆம். கூடல்ப்பெருநகர் ஓர் அரசியின் ஊடலால் அழிந்தேவிடுகிறது.

---

எது சரி?

வாசிப்பதால் மனிதன் பூரணமடை(யுற)கிறான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கானலை நீரென நம்பினாய் ——— "லெனின்"

கானலை நீரென நம்பினாய்
கன்னங்கள் கன்றிச்சிவந்தன!
உடம்பிலும் ஊமைக்காயங்கள்
உறக்கத்திலும் அடிக்கனவுகள்!

இந்த மரகதத் தீவிலே
எத்தனை ஆயிரம் இன்னல்கள்
ஏழை எளியவர் வயிறெல்லாம்
இன்றோ நாளையோ மறுநாளோ
எத்தர்கள் கும்பலைப் பொசுக்கிடும்
நித்திய தீப்பசிக் கோளங்கள்!

நாக்கு வறண்டது உண்மையே!
நாப்பசை அற்றதும் சத்தியம்!
தாகம் தவிர்த்துயிர் வாழ்ந்திட
நீர்நிலைச் சுரப்புகள் நீங்கிநீ

கானலை நீரென நம்பினாய்
கன்னங்கள் கன்றிச் சிவந்தன!

அழகிய ஞானச் சுனைகளும்
அருமந்த உணர்வு அருவியும்
அமுதம் சுரந்திடும் பொய்கையும்
பெருகிய இந்த நாட்டிலே
மப்பு மதிதரு மயக்கமோ?
உப்பு வெளியிலே ஓடிநீ

கானலை நீரென நம்பினாய்
கன்னங்கள் கன்றிச் சிவந்தன!

ஆசனப் பலகையில் இருப்பவர்
ஆரென உணரத் தவறினாய்
மாசன உள்ளத்தை மதமொழிப்
போதையில் ஆழ்த்திய வீரர்கள்!
அதள பாதாளம் விழுத்திடும்
முதலாளித்துவ உறவினர்!
சிதலுள்ளும் இரத்தம் தேடிடும்
சிந்தனையாளர்கள் அல்லவோ!

கானலை நீரென நம்பினாய்
கன்னங்கள் கன்றிச் சிவந்தன!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கொரு அழகிய நாட்டிலே
அதிசயம் ஒன்று நிகழ்ந்தது!
மகத்தான அக்டோபர் புரட்சியில்
மானுடம் அசுரத்தை வென்றது!
பல இன வண்ணப் பூக்களும்
தனி ஒரு தருவின் மலர்கள்போல்
கோடையும் மாரியும் வசந்தமாய்க்
குதூகலித் துள்ளம் மகிழ்ந்திடும்!

அன்னதன் காரணம் அறிவியோ?
அறிந்தால் அவ்வழி வருவியோ?

உழுபவன் என்றொரு மானுடம்
உழைப்பாளி என்றொரு மானுடம்
இணங்கிய இயக்க விசையிலே
இன்ப விடுதலை காணலாம்!

கானலை நீரென நம்பாதே
கன்னங்கள் கன்றிச் சிவக்காதே!

*10 - 07 - 1981*

புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

**எஸ். கே. ராஜென்**

**பெஸ்ரோன் விளம்பர சேவை**

**பஸ் நிலையம் : யாழ்ப்பாணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# கனவுகளில் மட்டும்.........

"தாமரைச்செல்வி"

அதிகாலை நேரத்தில்தான் அந்தக் கனவு அவளுக்கு வந்திருந்தது. ஒரு உயர மான... சுருண்ட தலையையுடைய... நாகரீக உடை அணிந்திருந்த இளைஞனுடன் வெள்ளை நிற காரில் யாழ்ப்பாண வீதி களில் உலா வந்தாள். ஒவ்வொரு தியேட் டரின் முன்னாலும் வெய்யிலில் குளித்துக் கொண்டிருந்த நடிக நடிகையரை அலட்சி யமாய் பார்த்தாள். கடைகளின் முன்னால் தொங்கும் சேலைகளுள் இரண்டை மனதுக் குள் தெரிவு செய்தாள். சுபாஷில் ஏர்கண் டிஷன் அறைக்குள் அமர்ந்து கிரீம் சர்பத் குடித்தாள். பின்னேர வெய்யிலில் மைதா னத்தில் கிரிக்கட் பார்த்தாள்...

கனவு கட்டென்று கலைந்து விட்டது. அம்மா கத்தியதால்தானோ என்னவோ, அந்தக் கனவை திரும்ப நினைத்ததில் கூட இவ்வளவு சுகம் இருக்குமா?

கனவில் அவள் அழகாய் இருந்தாள். தூக்கலான முன் பற்களும் கறுப்பு நிறமும் கூட அவலட்சணமாய் தெரியவில்லை. விடி யற்காலைக் கனவுகள் பலிக்கும் என்பது எவ்வளவு பொய். அவளுக்கே தெரியும் அந்தக் கனவு பலிக்கப் போவதில்லை. ஒரு காலமும் நிஜமாகப் போவதில்லை. அப்படி ஒரு இளைஞன் அவள் வாழ்வில் குறுக்கிடப் போவதில்லை. ஆனாலும் கனவுகாணும்போது எவ்வளவு சந்தோஷமாய் இருக்கிறது. யாராலும் தொந்தரவு செய்யமுடியாது. அழகில்லை என்று குற்றம் சுமத்த முடி யாது. கனவுகளில் மட்டும் அவள் அழகான கமலாவாய் தெரிகிறாள்.

அம்மா கூப்பிட்டு கூப்பிட்டு களைத்துப் போய் வந்து தொட்டு உலுப்பினாள்.

"எழும்படி ஆறரை மணியாப் போச்சு என்ன நித்திரை உது..." தனது நினைவை அம்மா கலைத்ததில் அவளுக்கு ஒரே ஆத் திரம். அம்மாவை முறைத்துவிட்டு எழுந்து போய் அடுக்களைக்குள் நுழைந்தாள். பாத் திரங்கள் 'ணங்' ,ணங்" என்று இடம் மாறி யது.

"ஒவ்வொண்டாய் துலைச்சிடுவியே... மெதுவாய் வையனடி. உன்னைத் துலைக்க வழியில்லாமல் நான் கிடந்து தவிக்கிறன்..."

அம்மா சத்தம் போட்டா.

பதிலுக்கு இவள் ஏதோ முணுமுணுத் தாள்.

இந்த வீட்டில இன்னும் எத்தினை நாளைக்கு அடைந்து கிடப்பது என்ற அர்த் தத்தில்.

கமலா முகம் கழுவிவிட்டு வந்து தலை இழுத்து பொட்டு வைத்தாள். கண்ணாடி யில் பார்த்தாள்.

இருட்டான முகம். முன்னே தள்ளிய இரண்டு பற்கள்... தன்னைப் பார்க்கவே அவளுக்கு சகிக்கவில்லை.

கண்ணாடியை 'பொத்' தென்று மேஜை யில் போட்டாள்.

அம்மா வாய் திறந்தால் மூடவே மாட்டாள்.

"எனக்கெண்டு வந்து வாய்ச்சாளே. நான் ஆரிட்ட போய்ச் சொல்லி அழ. முப் பத்தைஞ்சு வயசும் முடியப்போகுது. எங்கை கொண்டுபோய்த் தள்ள, புண்ணியவான் கடனையும் வைச்சிட்டு போய்ச் சேர்ந்தான் நான் என்ன செய்ய, காசுக்கென்னவழி... மாப்பிள்ளைக்கென்ன வழி, தலையும் நரைச் சுப் போகுது. இனி இந்த மூஞ்சிக்கு ஆர் வாறான்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவின் குரல் ஓயவில்லை. அவளுக்கு ஆத்திரம் வெடிக்கிறது. தலை நரைக்கிறதா?

அவள் கண்ணாடியை மறுபடி எடுத்து ஜன்னலருகில் சென்று பார்த்தாள். முன் நெற்றியில் இரண்டொரு வெள்ளி இழை கள்,

அட கடவுளே... இதை கவனியாமல் போனேனே—

''வயித்துக்கு போதுமாய் சாப்பிட வழியில்லை. ஒருதன் உழைக்கிறது இந்தக் காலத்தில எப்படி காணும். அரிசி தொட்டு விறகு வரை, விலைக்கு வாங்க வேண்டிக்கிடக்கு, இந்த லட்சணத்தில இவ ளுக்கு ஒரு வழியை எங்கை தேட, என்ரை வயித்தில வந்து பிறந்தாளே...

அம்மா மூக்கைச் சீறிச் சீறி புலம்பி னாள். உலையில் அரிசியைப் போட்டாள்.

''எவன் வந்து பார்த்தாலும் வேண் டாம் எண்டு சொல்லியிட்டுப் போறான். லட்சமாய் காசு கொடுத்தால் மூஞ்சியை யும் பாராமல் தாலியைக்கட்டுவான். ஏனடி....அங்கை என்னடி செய்யிறாய்,உன்ரை மூஞ்சியை கண்ணாடியில பார்த்தது போதும் வாடி.''

மாலை வரை மாறி மாறி அர்ச்சனைகள், சந்திரன் வேலை முடிந்து வீடு வரும் நேரம் நெருங்க நெருங்க அம்மா ஓரளவு வாயை மூடிக்கொண்டு விட்டாள்.

வாசலில் செருப்பின் ஒலி.

சந்திரன் அவளின் தம்பி முப்பத்தி ரண்டு வயசு முடிகிறது. காதோரம் லேசாய் நரைக்க ஆரம்பிக்கிறது.

சிடு சிடுத்துக் கொண்டே வந்தான். ஓவர்டைம் செய்த அலுப்பு. பஸ்ஸினுள் இடிபட்டு வந்த களைப்பு. அம்மா இனி வாயே திறக்கமாட்டாள். இரவு சந்திரன் வாசல் பக்கம் கதிரையில் அமர்ந்து இருட் டைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''ஏன் தம்பி இவளுக்கு உன்ரை சிநே சிதன்கள் ஆராவது இருந்தால் பாரன்! அம்மா ஆற்றாமையோடு சொன்னாள்.

''என்ரை சிநேகிதன்கள் அக்காவிலும் விட நாலு வயது குறைந்தவன்கள். இவ ளைச் செய்ய வாறாங்களே—'' எரிச்சலோடு முணுமுணுத்தான்.

சமீபகாலமாய் அவனும் கொஞ்சம் கொஞ்சமாய் மாறிக்கொண்டுதான் வரு கிறான்.

ஒழுங்காய் அலுவலகம் போய் வந்து மாதம் முடிந்ததும் சம்பளத்தை வாங்கி வந்து அம்மாவிடம் கொடுத்து விட்டு தானும் தன்பாடுமாய் இருப்பான். இரு ட்டை வெறித்துப் பார்ப்பான். இதுதான் அவனுக்கு பொழுது போக்கு. தவிர்ந்த நேரங்களில் சீறிச் சினந்து விழுவான். அக் காவைப் பார்க்கும் போதெல்லாம் எரிச் சல்படுவான்.

பாவம் அவனும்தான் என்ன செய்வான்?

நாள்தோறும் தன் ஆசைகளையும் எதிர் பார்ப்புக்களையும் குழிதோண்டிப் புதைத் துக்கொண்டிருக்கிறானே.

நின்று கேட்டுக்கொண்டிருந்த அவளுக்கு மனம் தாங்கவில்லை. படுக்கையில் படுத்து விட்டாள். இதுவரை எத்தனைபேர் வந்து பெண் பார்த்துவிட்டார்கள்.

பிடிக்கவில்லையென்று முகத்துக்கு நேரா கவும் கடிதமூலமாயும் தெரிவித்தார்கள். அல்லது நிறைய பணம் கேட்டார்கள்.

சிலவேளைகளில் செத்துப் போய்விட லாமா என்று நினைத்திருக்கிறாள்.

வாழவேண்டும் என்ற ஆசை அதைத் தடுத்தது.

ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்டு...... அவ னுக்காக ஒவ்வொருநாள் மாலையும் காத் திருந்து சராசரி பெண்களுக்குள்ள ஆசா பாசங்களோடு வாழவேண்டும் என்றுதான் ஆசைப்படுகிறாள்.

திடீரென்று பொங்கிக்கொண்டு அழுகை வந்தது.

சத்தம் போடாமல் தலையணையை நனைத் தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல வருடப் பயிற்சியில் விம்மலில்லாமல் அழ அவளால் முடிந்தது.

ஒரு மாதத்திற்குப் பிறகு ஒருவன் அவளைப் பெண்பார்க்க வந்தான். தலையில் வழுக்கை. லேசாய் நரை இழைகள் - முதல் மனைவியை இழந்தவனும், நான்கு குழந்தைகளாம்.

அவள் மனதுக்குள் வேதனைப்பட்டுக் கொண்டே போய் முன்னால் நின்றாள். நாலு குழந்தைகளின் சண்டைகளை தீர்த்து வைப்பதுபோல மனதுக்குள் நினைத்தாள்.

''சித்தி! இவன் அடிக்கிறான். ஐயோ சித்தி கையை முறுக்கிறான்.''

''சித்தி! குளிக்கவார்த்துவிடு.ஸ்கூலுக்கு நேரம் போட்டுது.''

''இந்தச் சட்டைக்குப் 'பின்' குத்திவிடு சித்தி''

நினைவுகளை சிரமப்பட்டு கலைத்தாள்.

அம்மா மிகவும் நம்பிக்கையோடு இருந்தாள்.

வடை வாழைப்பழம் பரிமாறி நல்ல டீ போட்டுக் கொடுத்தாள்.

தட்டுக்கள் காலியானதும் வந்தவர் சந்திரனைப் பார்த்தார்.

'தம்பி! நான் சொல்லுறதை தவறாய் நினைக்காதேங்கோ, காசு பணம் வேண்டாம் எண்டுதான் செய்ய வந்தனான். என்ரை பிள்ளையளுக்காகத்தான் நான் கல்யாணம் செய்யப்போறன். ஆனாலும் பொம்பிளை கொஞ்சமாவது லட்சணமாய் இருக்க வேண்டாமே. காசு பணம் பெரிசில்லை. ஆனா...'

அதற்குப் பிறகு அவரது பேச்சைக் கேட்க அவளால் முடியவில்லை.

'சித்தி' ஸ்தானத்துக்குக் கூட அருகதை இல்லாதவளா...

வந்தவர் இரண்டுதடவை மன்னிப்புக் கேட்டுக்கொண்டு போய்விட்டார். அவள்

(தொடர்ச்சி 22ம் பக்கம் )

## 'இருதயுகம்'

**மட்டற்ற மகிழ்ச்சியடைகிறது; மனதார வாழ்த்துகிறது.**

தினகரன் பிரதம ஆசிரியர் திரு. சிவகுருநாதன் அவர்கள் உழைக்கும் பத்திரிகையாளர் சங்க தலைவராக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டிருப்பது ''இருதயுக'' த்திற்கு இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகிறது.

அவர்களின் எழுத்து வன்மை, இடையறாத உழைப்பு, பெரியோரைப் பேணும் சால்பு, இதமான நேசிப்பு, ஆதியான அரிய பண்புகளுக்கு கிடைத்த பெரிய வெற்றி இதுவாகும்.

பலருக்கும் விசித்திரமாக அமையும் வாழ்க்கை அவர்களுக்கு சித்திரமாக அமைந்துவிட்டதும் அன்னாரின் வெற்றியின் அதிமுக்கிய காரணி ஆகும்.

மேலும் மேலும் அவர்கள் பதவியிலும் நிலைமையிலும் உயர்ந்தோங்கி பிரகாசிக்க வேண்டுமென இருதயுகம் உள்ளார்ந்த உணர்வுடன் வாழ்த்திக்கொள்கின்றது.

**- ஆர்.**

## நாக்குச் சுத்தம்

வாணிகலைக்கழகம் ஓகோ என ஓடிக்கொண்டிருந்த காலம். அந்த நாட்களில் நாங்கள் சிலரும் ஆசிரியர் திரு. கவீ. அவர்களும் ஒரு காலையில் சந்நிதிகோயில் தரிசனத்திற்காக சென்றிருந்தோம். குளிக்கும்பொழுது திரு. கவீ. அவர்கள் நாக்கூத்தை எடுத்துக் கொண்டிருந்தார். வாறாக நாக்கில் இருந்து இரத்தமும் வந்தது.''என்னசேர்! நாக்கையே எடுத்துவிடுவீர்கள் போல் இருக்கிறதே'' என நான் கேட்டேன். அவர் சிரித்துக்கொண்டே ''தம்பி! எப்பொழுதும் 'நாக்கு சுத்தம்'' ஆக இருத்தல் வேண்டும். அல்லது போனால் நாக்கையே எடுத்துவிட்டால்தான் என்ன'' என்று கூறினார். நமக்குப் புரிந்து கொண்டது கவீ. இன் தமிழ் இன்றைக்கும் நாக்குச் 'சுத்தம்'தான். தகவல்: 'சிவா'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாங்கள் அத்துளுவின் புத்திரர்கள் — கவீ.

அத்துளுவின் புத்திரர்கள் நாங்கள் — ஞான
ஊற்றுக் குரித்தான சித்தர்களும் நாங்கள்
நித்தியமும் அத்துளுவாள் நெஞ்சம் — நேச
அலையாகி மோகித்து நமையெலாம் கொஞ்சும்!

'கோவை' புகழ் சேர்பெருமைக் கரவை — கூடிக்
கும்மாளம் போட்டுநிதம் குளித்தாடும் பரவை
பாவண்டி நடையிலும் வாணி — நிதம்
படுப்பதும் அத்துளுப் பூந்தொட்டில் பாரீர்!

வற்றாத ஊற்றாகி வந்தாள் — நமது
வாழ்வுக்கு வளமூட்டி வலுவூட்டி நின்றாள்
பொற்றா மரைப்பொய்கை' என்று — நான்
போற்றிடும் புனிதநீர்ப் புண்ணியச் செல்வி!

அன்னையாய் அரவணைத் திடுவாள் — அன்புச்
செவிலியாய் அமுதூட்டி அருமையாய் வளர்ப்பாள்
கன்னியாய்க் காதல்நகை புரிவாள் — என்
கவிதைஅந் நளினத்தில் கரைபுரண் டோடும்!

நீச்சல்எதிர் நீச்சல்என இரண்டும் — நமக்குக்
கைவந்த கலைகளாய்க் கற்பித்து வைத்தாள்
பாய்ந்துஆழச் சுழியோடி ஞலும் — எதிலும்
படாமலே மிதந்துவிடும் பாக்கியமும் தந்தாள்!

சேறாகக் கலக்கிவிட் டாலும் — அன்னை
செந்தா மரைவதனம் பொலிவுற்று மிளிரும்
ஆறாக அழுகின்ற பிஞ்சும் — அவள்
அருகிலே வந்துவிட ஆனந்தம் மிஞ்சும்!

பச்சைப் பசேலென்று வயல்கள் — அவள்
பார்வையில் கருக்கொண்டு கதிர்களைத் தள்ளும்
அச்சம்மிகு கோடைவெங் காயம் — மறைந்து
அன்னைஅடி யூறலில் அடிதிரண்டு கொள்ளும்!

மாரிமழை பெய்கின்ற போது — அவள்
மலர்மேனி ஒளிவீச மல்லாந்து படுப்பாள்
ஆவியைக் கரைத்தெங்கள் இளைஞர் — அட்ட
காசங்கள் செய்தாலும் அவள்சினந் தறியாள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொக்குவாய்க் கிழவியா னாலும் — அன்னை
புன்னகைச் சிந்தலொடு பொக்கணையில் வைத்து
மக்களைக் குளிப்பாட்டி விடுவாள் — அந்த
மாதரசி இல்லையேல் நமக்கேது மலர்ச்சி?

ஓயாமல் ஊத்தைகளை உண்டும் — மறு
உதயத்தில் தெள்ளருவிச் சுனையாகி விழிப்பாள்
மாயாவி! மோகினி! அன்னை — கரவை
மாயவன்கள் வட்டமிடும் மங்கைநப் பின்னை!

சாய்ங்கால வேளைகளில் நாங்கள் — அன்னை
சந்நிதிப் படிகளில் உட்கார்ந்து கொண்டு
பாங்கான சமதர்மம் பேசி — உள்ளம்
பக்குவம் உற்றதும் பசுமைநினை வன்றோ!

கரவைதரு மழலைகளை என்றும் — தாய்
கண்ணுறங் காமலே காத்து வருகின்றாள்
அரவோடு பழகிடும் அமலன் — தந்த
ஆனைமுகக் கன்றுடும் தீர்த்தமும் ஆனாள்!

**2**

பருவம் மதர்த்த பசுங்கொடியே பாசம் மிகுந்த காரணமோ
உருவம் கரந்து வீதியெலாம் வருவாய் வாழி! அத்துளுவே!
உருவம் கரந்து வருவதெலாம் உன்னூர்க் கிளிகள் கொடியிடையின்
சருவம் சுமக்கும் துயரம்தீர் கருணை வாழி! அத்துளுவே!

ஆதிக் கரவைக் குலக்கொடியே அன்பு கனிந்த மனவளமோ
சீதம் பரக்க மனைதோறும் வருவாய் வாழி அத்துளுவே
சீதம் பரக்க மனைதோறும் வருவ தெல்லாம் செம்மலர்கள்
ஏதம் துடைக்கும் செயலென்றே அறிந்தேன் வாழி அத்துளுவே!

---

## இவ்வறிஞரும்
## இவ்வாய்வுக்கட்டுரையும்

கவி.யுடன் நாங்கள் சிலர் நூல்நிலையம் ஒன்றில் இருந்து கதைத்துக்கொண்டிருந்தோம். ஆராய்ச்சிக் கட்டுரைகள் பற்றிய சர்ச்சை. இப்ப நினைவில்லை. ஏதோ ஒரு மன்றத்தின் வருடாந்த மலர். அதில் ஒரு கட்டுரை பற்றிய ஆசிரியர் குறிப்பில் "இவ்வறிஞர் எழுதிய இவ்வாய்வுக் கட்டுரை சமுதாயத்திற்கு மிகவும் உபயோககரமானது" என்ற குறிப்பைக் கண்டுவிட்டார். உடனே பட்பட் என்று கட்டுரையைவாசித்து முடித்துவிட்டு எங்களைப் பார்த்துச் சொன்னார்; இது மிகப் பொருத்தம்தான். கட்டுரையும் வாய்வுக் கட்டுரையாகத்தான் தெரியுது. ஆனபடியால் எழுதியவரும் வறிஞரேதான். நீங்கள் எழுதும் பொழுது இவ் ஆய்வுக் கட்டுரை என்று எழுதுங்கள் என்று சிரித்துக்கொண்டே சொன்னார். எங்களுடன் சேராதவர்களும் சிரித்துக்கொண்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தியின் சந்நிதியில் மனிதன் பெற்ற அனுபவத்தின் எதிரொலி

உலகச் சிற்பக் கலையில் தனியிடம் வகிக்கும் நடராஜதாண்டவ வடிவம் இக்காலத்தில்தானே முழுநிறைவெய்தியது. வெறுமனே புராணக் கதைகளுக்குக் காட்சி விளக்கம் கொடுத்ததாக மட்டும் நடனத் தோற்றம் அமையவில்லை. பிரபஞ்ச ரீதியில் இயக்கத்திற்குத் தூல வடிவம் கொடுப்பதாகவே அது விளங்குகிறது. இயக்கத்தை ஒரு கணத் தோற்றத்தில் தேக்கும் கலை நுட்பத்தையும் திட்பத்தையும் அவ்வமைப்பில் அற்புதமாகக் காணலாம். அது சக்தியின் சந்நிதியில் மனிதன் பெற்ற அநுபவத்தின் எதிரொலி என்றும் கூறலாம். சிவ நடனத் தோற்றத்தின் தாற்பரியத்தைக் கலாயோகி ஆனந்த குமாரசாமி நவீன உலகிற்கு நன்கு எடுத்து விளக்கியிருக்கிறார். எனவேதான் அத்தகைய அற்புதமான உருவத்தைக் கண்டால் **''மனிதப்பிறவியும் வேண்டுவதே இந்த மானிலத்தே''** என்று வாழ்க்கையை அங்கீகரித்து, அக்காலத்தில் நிலவிய மாயாவாதத்தை மறுதலித்துக் குதூகலத்துடன் பாடினார் நாவுக்கரசர். ''நாமார்க்கும் குடி அல்லேம்; மனிதப் பிறவி வேண்டும்'' என்றெல்லாம் ஒருவர் கூறுவது இலேசான காரியம் அல்ல. தன்னம்பிக்கை, வாழ்க்கை உறுதி, செயலூக்கம் முதலியன எந்த அளவுக்கு அவரை உந்தியிருக்கும் என்பதை நாம் வற்புறுத்த வேண்டிய அவசியமேயில்லை. இவ்வாறு கலையிலும் இலக்கியத்திலும் துல்லியமாய்க் காணப்படும் வாழ்க்கைத் தத்துவம் அன்றைய தமிழர் சமுதாயத்திலே விவசாயம், கைத்தொழில், கடல்கடந்த வாணிபம், சமுதாய மாற்றம் முதலியவற்றுக்கும் ஏதுவாய் அமைந்தது என்னும் அடிப்படை உண்மையைப் பலர் எண்ணிப் பார்ப்பதில்லை. ஒரு சில பக்திமான்களின் பக்திப் பரவசமாக மட்டும் அத்தத்துவம் இருக்கவில்லை: இருந்திருக்கவும் முடியாது. சாதாரண விவசாயிகளும் கைப்பணியாளரும் புதியதொரு தெம்புடன், வாழ்க்கைப்பற்றுடன், உழைத்த சூழலிலேயே—கலையும் இலக்கியமும் முன்னிருந்திராத முறையில் செழித்து வளர்ந்தன. அங்கே கோயில் தத்துவம் முழுமை கண்டது. புதிய பரிமாணத்தைப் பெற்றது.

டாக்டர் கைலாசபதியின்
''நவீன இலக்கியத்தின் அடிப்படைகள்'' எனும் நூலில் இருந்து.

---

# தேசிய கணித இலக்கியம்?

கந்தனொரு வயல்கொத்த மூன்றுமணி யாகும்
கபுறூளை அதுசெய்ய ஐந்துமணி என்க
முந்திவரு சுலைமானுக் கேழுமணி என்பர்
மூவருமே சேர்ந்துசெயின் என்னமணி ஆகும்?

இலக்கியம் விமர்சனம் பற்றிய சர்ச்சை சூடுபிடித்துக்கொண்டிருந்தது. நக்கல், சிண்டல் அடிக்கடி சுற்றுவட்டத்தில் ஓடிக்கொண்டிருந்தன. திடீரென திரு. க. வீ. அமைதியாகச் சிரித்துக்கொண்டே, சோதிட நூலையும் சில விமர்சகர்கள் இலக்கிய வரலாற்றில் குறிப்பிட்டுள்ளார்கள். இலங்கைப் பாடநூல் திணைக்களமும் தேசிய ஒருமைப்பாட்டை 'வளர்ப்பதற்காக' பாடநூல்களில் மூவினப் பிள்ளைகள் பெயரையும் போடுகின்றது. தேசிய ஒருமைப்பாடு இந்த அபூர்வ மூளைகளில் இப்படி வளரும் பொழுது ஏன் கணிதத்தையும் தேசியமும் இலக்கியமும் கலந்ததாகக் கொள்ளுதல் கூடாது என்று சொல்லிக் கொண்டே மேற்படி கவிதையை எழுதச் சொன்னார். கவிதையை நாங்கள் எழுதிக் கொண்டோம். வாசக நண்பர்களே நீங்கள் என்ன நினைக்கிறீர்கள். மேற்படி பாடல் தேசிய கணித இலக்கியம் இல்லையா?

**தகவல்: 'சிவா'**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளுவம் வளர

"பிலிப்நேரி"

ஒரே தெய்வம்

ஒரே நாடு

ஒரே சாதி

ஒரே நீதி

ஒரே அரசு

என்ற

இருதயுக இலட்சியம்

நம்மிடையே

அகமும் புறமும்

வேர் விட்டு

கிளை பரப்பி

செழித்து வளர்ந்து

கனி தந்து

பயன் தர வேண்டுமாயின்

நம் கல்விக்கூட மெங்கினும்

வீண் கலகத்தை விட்டொழித்து

வள்ளுவத்தை

மாசறக் கற்பித்து

அதன் மாண்புதனை

உற்றும் உணர்த்தியும்

வரவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்டிதர் கற்கை நெறியும் யாழ்: பல்கலைக் கழகமும்

பேராசிரியர் ப. சந்திரசேகரம்
தலைவர், கல்வித்துறை
யாழ். பல்கலைக் கழகம்

யாழ்ப்பாணத்தில் ஒரு தமிழ்ப் பல்கலைக்கழகம் நிறுவப்பட வேண்டும் என்று தர்க்க அடிப்படையில் சொல்லியும் எழுதியும் வந்த அறிஞர்கள் நாவலர் பெருமானும் விபுலானந்த அடிகளும் ஆவர். நாவலர் இப் பல்கலைக்கழகத்தின் அமைப்பு முறையைச் செவ்வனே கூறியபின்னர் சுவாமி விபுலானந்தர் இப் பல்கலைக்கழகத்தின் குறிக்கோள் யாதாய் இருக்க வேண்டும் என்றும் 1927ஆம் ஆண்டு 'விவேகானந்தன்' என்னும் சஞ்சிகையில் தெளிவுற எடுத்துரைத்தார்கள்.

இங்கு உருவாக்கப்பட்ட ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கத்திற்கு நாவலர் கரு அளித்தாரெனவும், அடிகளார் பொன்னம்பலம் இராமநாதன் போன்றோர் உரு அளித்தார் எனவும் கொள்ளலாம். இவற்றின் தோற்றமான யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் புலவர் தேர்வு, வித்துவான் பரீட்சை பண்டிதர் கற்கை நெறி போன்ற பாடநெறிகள் இடம்பெறுதல் மிகவும் பொருத்தமானதாகும்.

இந்நெறிகளின்மூலம் தமிழ் மொழியும், தமிழ் மொழிமூலம் அமையும் நெறிகளும் கூடிய வளமும் செழுமையும் பெறும். அறிசாதனம் பெருகிக்கொண்டு செல்கின்ற இக் காலகட்டத்தில் வேண்டுமாயின் தற்பொழுது உள்ள இந் நெறிகளைப் புனருத்தாரணம் செய்து நாம் வாழுகின்ற யுகத்திற்கு ஏற்றவாறு இவற்றினை நெறிப்படுத்தலாம்.

பண்டிதமணி. கதிரேசன் செட்டியார், கந்தசாமிப் பெரியார், சுவாமி விபுலானந்தர் அகிலம் போற்றிய அறிஞர்கள். இவர்கள் தமிழ் மரபுவழி உயர்ந்தவர்கள் என்பதை மனதிற் கொள்ளவேண்டும்.

தமிழ் மக்களின் மரபு, நம்நாட்டுப் பாரம்பரியம் புலவர்களாலும், கவிஞர்களாலும் தமிழ் ஆசிரியர்களாலும் பேணிப் பாதுகாக்கப்பட்டு போற்றப்பட்டு வந்தது என்பதனை நாம் ஏற்று இத்தகைய நெறிகளுக்கு யாழ். பல்கலைக் கழகம் இடமளிப்பது அறிவுக்கு அஞ்சலி செலுத்துவதாகும்.

---

சந்திரனைப் பார்த்தாள். கவலை தோய்ந்த அவனது முகத்தைப் பார்க்க அவளுக்குப் பரிதாபமாய் இருந்தது.

மறுபடி அம்மாவின் புலம்பல், ''காலம் வருகுதில்லையே இந்தக் கழுதைக்கு. வயித்தில நெருப்பு கட்டிக்கொண்டு, கொஞ்சம் முன் பல்லை அமத்தி மினுக்கடி. பார் மிதந்து கிடக்கிறதை.''

அவள் நிதானமாய் படுக்கையில் படுத்துப் புத்தகத்தை விரித்தாள்.

''இனி நீ தொடங்கிவிட்டாய் ஒப்பாரி வைக்க, வீட்டுக்குத் தரித்திரம் வராமல் என்ன செய்யும்? உழைக்கப்போட்டு வந்தாலும் ஆறுதல் இல்லை. சந்திரன் எரிந்து விழுந்தான்.

அவள் புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டினாள். நீலக் காரில் ஒரு ஜோடி பவனி வந்துகொண்டிருந்தது, இதுமாதிரி அவள் இருந்தால்...

இந்த கனவுகளில் மட்டும் யாரும் வந்து குறுக்கிடமுடியாது. திட்டமுடியாது. பெண் லட்சணமில்லை என்று ஒதுக்க முடியாது. அவளுக்கு இதுவே பெரிய சந்தோஷமானதாயும் திருப்தியாயும் இருந்தது.

தன்னால் சந்திரனின் வாழ்க்கையும் ஏன் வீணாய்ப் போகவேண்டும்? தலை நரைத்தாலும் அவனை யாரும் லட்சணமில்லை என்று சொல்லிவிடமாட்டார்கள். அவன் ஆண் வர்க்கம், இல்லையா...

''எனக்கு இனிமேல் கல்யாணமே வேண்டாம். நீ ஒரு பெண்ணைப் பார்த்துச் செய்'' என்று சந்திரனிடம் கண்டிப்பாய் சொல்வதற்காக அவள் படுக்கையிலிருந்து எழுந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியஜோதி - ஓர் அறிமுகம் நாராயணன்

''எளிய பதங்கள், எளிய நடை,எளிதில் அறிந்து கொள்ளக் கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடைய காவிய மொன்று தற் காலத்திலே செய்து தருவோன் நமது தாய் மொழிக்குப் புதிய உயிர் தரு வோனாகின்றான். ஓரிரண்டு வருஷத்து நூற்பழக்கமுள்ள தமிழ் மக்களெல்லோ ருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன் காவியத்துக்குள்ள நயங்கள் குறைவுபடாமலும் நடத்துதல் வேண்டும்.

பாரதியார் தனது பாஞ்சாலி காவியத்திற்கு தன் கைப்பட எழுதிய முகவுரையின் முதன்மையான உயிர்த் துடிப்புள்ள வாசகங்கள் இவையாகும். காவியத்தைப் புதுமை யாகவும் விறுவிறுப்பாகவும் முடித்துக் கொண்டு, அதனை சமர்ப்பணம் செய்த வகை யிலும் மேற்படி கருத்துக்கு அழுத்தம் கொடுத்து விட்டார் பாரதியார். ''தமிழ் மொழிக்கு அழியாத உயிரும் ஒளியும் இயலுமாறு இனிப் பிறந்து காவியங்கள் செய்யப் போகிற வரகவிகளுக்கும் அவர்களுக்குத் தக்கவாறு கைங்கரியங்கள் செய்யப் போகிற பிரபுக் களுக்கும் இந் நூலைப் பாத காணிக்கையாகச் செலுத்துகிறேன்.'' (காணிக்கை செய்யும் விதத்தில் கூட நமக்கும் பாரதியாருக்கும் உள்ள வேறுபாடு தான் எவ்வளவு?)

கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை அவர்கள் பாரதியாருக்கு முன் பிறந்து பாரதி யாருக்குப் பின்பு அதிக காலம் வாழ்ந்தவர். பாரதியார் 1882-1921.கவிமணி1876-1954. 'இனிப் பிறந்து காவியங்கள் செய்யப் போகிற வரகவிகளுக்கும்' என பாரதியார் குறிப் பிட்டாலும் கவிமணி அவர்களை அந்த வர கவிகளுக்குள் அடக்கிப் பார்ப்பது தப்பான தாகவோ தவறானதாகவோ ஆக இடமில்லை. பாரதியாருக்குப் பின்பு இன்றுவரை பலப் பல காவியங்களைக் கவிஞர்கள் பலர் படைத்திருந்தாலும், பாரதியாரின் 'பாதகாணிக் கையை' முற்றமுழுக்க முழுமையாக ஏற்றுக்கொண்டவர் கவிமணி என்றே கருத முடி கின்றது.

எளியபதம், நடை, சந்தம், பொதுமக்கள் விரும்பும்மெட்டு என்று விரும்பிய பார தியார் இவற்றுடன் கூடவே பொதுமக்களை நன்னெறிப்படுத்தும் சிந்தனைகள் என்றும் சொல்லியிருப்பார் என்றால் எத்துணைப் பொருத்தமாய் இருந்திருக்கும். பாரதியார் சொல்லாதுவிட்ட இதனையும் கவிமணி அவர்கள் நன்கு புரிந்துகொண்டு 'ஆசியஜோதி' என்னும் அற்புத காவியத்தைத் தந்தது இலக்கியப் பிரியர்களை எல்லாம் — தமிழ் வளர்ச்சியில் இடையறாத வாஞ்சை உள்ளவர்களை எல்லாம் வியப்பில் ஆழ்த்தியதில் வியப்பு இல்லை.

கி. மு. 563இல் பிறந்தவரெனக் கருதப்படும் கௌதம புத்தர் ஜீவநேசிப்பைக் குறிக் கோளாகக் கொண்டு தன்கால சமூக விரோதங்களையும் குரோதங்களையும் தருக்க பூர் வமாகச் சாடி, உயர்ந்த சிந்தனைகளை உலகுக்கு அளித்த ஞானதபோதநர் ஆவர். சாதித் திமிர்ப்பு, இறந்தவர்களுக்கு உயிர் கொடுத்துவிடலாமென்ற மூடநம்பிக்கை. உயிர்ப் பலியிடுதல் ஆதியான சிறுமைகளையெல்லாம் அன்புவழியிலும் அறிவுநெறியிலும் களைந்து விட முயற்சித்தவர் புத்தர் பெருமான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த மகான் காலத்தில் நிலவிய சமூகக் குறைபாடுகள் அத்தனையும் இத்தனை ஆண்டுகள் ஓடியபிற்பாடும் நாகரிக வளர்ச்சியுற்ற தன்காலத்திலும் மிக இறுக்கம் பெற்ற கொடுமைகளாக, சமுதாயத்தை நாசப்படுத்தி வருவதைக் கனிந்த உள்ளம் படைத்த கவிமணி அவர்கள் எத்தனை நாட்களாக எண்ணி எண்ணித் துடித்திருப்பாரோ? ஏன் இன்றும்கூட இவ்வாறான சமூக அநீதங்களுக்கும் மூடநம்பிக்கைகளுக்கும் முடிவுகாண முடியவில்லையே.¶

சமுதாய ஈனங்கள் நோக்கி விரிந்து பரந்து சென்ற கவிமணியின் உள்ளுணர்வு ஆங்கில மொழியில் எட்வின் ஆனல்ட் எழுதிய Light of Asia என்னும் நூலைப்பற்றிப் படர்ந்து கொண்டதில் புதுமை இல்லை. புதுமையெல்லாம் தழுவலோ மொழிபெயர்ப்போ என்று எவருமே கருதமுடியாத வகையில் ஆசியஜோதி என்னும் காவியத்தைத் தமிழ் பேசும் மக்களுக்குத் தந்துவிட்டதுதான்.

ஒன்பது பகுதிகளைக் கொண்ட இக்காவியத்தின் முதல் அத்தியாயமான 'புத்தர் அவதாரம்' பௌராணிக மரபுடன் தொடங்கப்பட்டாலும் ஏனைய பகுதிகள் அத்தனையும் யதார்த்த நிலைப்பாட்டில் கவிமணியை வைத்துள்ளன. ஓரிரண்டு வருஷத்து **'நூல்'** பயிற்சி உள்ளவர்களுக்கும் விளங்கக்கூடியதான காவியம் வேண்டுமென விரும்பினன் பாரதி. ஆனல் சாதாரணமான தமிழ் அறிவுள்ளவர்கள்கூட 'ஆசியஜோதி'யில் தாமாகக் கலந்துவிட முடியும்.

பாஞ்சாலி காவியம் எழுதிய பாரதி அதற்கொரு குறிப்புரையும் எழுதிவிட்டுச் சென்றன். ஆனல் ஆசியஜோதிக்கு எவ்வித வழிகாட்டல்களோ பதவிளக்கங்களோ தேவையில்லை. நவீன காவிய உலகின் பிதாமகரான பாரதியைக்கூட ஆசியஜோதிமூலம் கவிமணி விஞ்சிவிட்டார் என்றே கருதத் தோன்றுகின்றது.

---

¶ யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு கோயில் முக்காமையாளர் தன்கோயிலில் ஆடு, கோழி பலியிடுவதைத் தடை செய்யக் கூடாதென பொலிஸ் அதிகாரிக்கு உத்தரவிடவேண்டுமெனக் கோரி நீதிமன்றத்தில் மனுக் கொடுத்த செய்தியையும் அறிகிறோம். (ஈழநாடு 8-4-82)


# ASIAN INSTITUTE

## ஏசியன் இன்ஸ்ரிரியூட்

(Opposite Insurance Corporation)

**615, Hospital Road,** **JAFFNA.**

## G. C. E. A/L 1982, 1983

விஞ்ஞான, கலை, வர்த்தக வகுப்புக்கள்

## G. C. E. O/L Dec. 1982

மற்றும் சகல வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

மேலதிக விபரங்கட்கு: **S.** அன்ரன் நிர்வாகி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆபிரிக்கக் கவிதை

# எல்லாம் இழந்தவர்கள் — செனகல் நாட்டுக் கவி டேவிட் டியோப்

உள்ள வானில் பரிதி ஒளிர்ந்தது;
ஓங்கு தாழைகள் மாலையில் ஆடல் போல்
கொள்ளை கொள்ளும் என் கோதையர் பேரெழில்
கொட்டி நின்றனர்; சுழிக்கும் பயங்கர
வெள்ளத்தே, பேராற்றில், குழந்தைகள்
வீறு கொண்டு விளையாட் டயர்ந்தனர்;
வள்ளங் கள்பல, முதலைக ளோ(டு), எதிர்
மல்லுக் கட்டின; நிலவு பொழிகையில்—

முரச திர்ந்திடு வன லயந்தனில்
முறுகி யங்குயர் விடுதலைக்
கனலெ ழுந்திட மனம கிழ்ந்துடன்
கவலை யின்றியே ஆடினோம்!

ஆதவன் கதிர் ஒருநாள் அணைந்தது;
அமைதி சூழ்ந்தது;சோகம் கவிந்தது;
கோதை மார்கள்தம் கொவ்வை இதழ்களை
கொள்ளையர்— கொள்ளிக் கண்ணர்— சுவைத்தனர்.
ஏதிலா என் குழந்தைகள் அம்மண
இயற்கை நீத்தனர்; பெருகு குருதி இப்—
போ(து), அவர் சீருடை யானது!
புகுந்ததால் அடி மைத்தளை நெஞ்சினுள்!

முந்தை இரவுகளில் நிலவில் முழங்கி வந்த
தந்தையர்தம் முரசங்கள் தாம் — அடங்கிப் போயினவே!
ஓங்கி எரிகனலின் ஒளியில் விடுதலையில்
நாங்கள் களித்தாடும் நடனமெங்குப் போனதுவோ

(தமிழில்: சோ. பத்மநாதன்)

---

## வாசகர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும்

# புதுவருட சோபனம்

'துர்மதி' விடை பெற்றுவிட்டது. நம் எல்லோருடைய நன்மதிக்காகவும் ''துந்துபி'' நம்மை வரவேற்கின்றது. உவப்புடன் அவ்வரவேற்பை நாமும் ஏற்றுக்கொள்ளுவோம். தேவவாத்தியங்களில் மிகவும் மங்களகரமானது 'துந்துபி' வாத்தியம். நாமும் மங்களகரமான செய்திகளைச் செவிமடுப்போமாக.

---

யாழ். பல்கலைக் கழக கல்வித்துறைத் தலைவர்
**பேராசிரியர் ப. சந்திரசேகரம் அவர்களின் ''கல்விச் சிந்தனைகள்''**
அடுத்த இதழில் இருந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிருதயுகம்

இதழ் 7 - 1982

## சுளையிருக்கத் தோல் சுவைத்தல்

ஆம், பாரதி நூற்றுண்டு! நாதசுர தவில் சமாக்கள்போல் எங்கும் ஒரே விழா அமளிகள்! பாரதி பற்றிய புதிய 'கண்டுபிடிப்பு'கள் உந்துசக்திகள், பாரதிக்கு ஞானதீட்சை வைத்த புண்ணியவாளர்கள் பற்றிய சொந்தம் கொண்டாடல்கள்!

பத்திரிகைகள் எல்லாம் துண்டாயும் துணுக்காயும் வியாசங்களாயும் நிரம்பி வழிகின்றன. ஆராய்ச்சிக் கட்டுரைகள் அவைவேறு. ''கலைகலைக்காக'' வாதம்போல் இவ் ஆராய்ச்சிகளும் ஆராய்ச்சிக்காக என்றுதான் கருதத் தோன்றுகின்றது.

இவ்வளவில் விட்டார்களா பாரதியை? பாரதியைக் குற்றவாளிக்கூண்டில் நிறுத்தி மேன்முறையீட்டு நீதிமன்றம், உயர்நீதி மன்றம்வரை வழக்காடல்களும் மோதல்களும்! இது வேடிக்கை மாத்திரமல்ல, விபரீதம் விளைவிப்பதும் கூட. விஞ்சிநிற்பதும் எஞ்சிநிற்பதுமான பட்டிமன்றங்கள் பாரதியைச் சல்லடை போடுகின்றன.

போகிறபோக்கில் பாரதிநூற்றுண்டு களமாக அமைய, பாரதி 'மொட்டை" அடிக்கப்பட்டு விடலாம் போலவும் தெரிகிறது. பாரதியின் கெட்டகாலமோ என்னமோ?

சரி, நாம் செய்யவேண்டியதெல்லாம் என்ன? பாரதியின் ஆத்மாவைக் கண்டுகொள்வோம். பந்துபட்ட ஏழைப் பொதுமக்களின் சுதந்திரத்திற்காகவும் சுபீட்சத்திற்காகவும் துடியாய்த் துடித்தது அந்தக் கவிதை ஆத்மா.

மக்கள் அனைவரையும் ''எல்லோரும் இந்நாட்டு மன்னர்"என அரசு கட்டில் ஏற்றிவைத்தது பாரதியாரின் பொதுநல சிந்தனை. அவன் ஏற்றிவைத்தாலும் வர்க்கநலம் பேணும் நாசகரமான சமுதாயம் ஒரேயடியாக இறக்கி பரிதாபகரமாக அவர்களைத் தனிமைப்படுத்திவிட்டது.

''எல்லோரும் மன்னர்" என்றவன் அதற்கான சிந்தனைகளையும் அள்ளிச் சொரிந்தான் நாம் செய்யவேண்டியதெல்லாம் அப்புனித சிந்தனைகளைப் பொதுமக்கள் முன் எடுத்துச் செல்லுதல் வேண்டும். வெளிச்சம் போட்டுக் காட்டவேண்டியவற்றை வெளிச்சம்போட்டுக் காட்டித்தீர்ந்தாக வேண்டும். அவ்வெளிச்சத்தில் பொதுமக்கள் ஞானோதயம் பெற்று இயக்கரீதியாக அணிதிரளல் வேண்டும். எதிரிகளை இனம்கண்டு தூக்கி வீசிவிட்டு, புதியதொரு சமுதாயத்தை அமைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

நல்லதொரு செயற்பாடும் சிறந்ததொரு சிருஷ்டி இலக்கியமே! இவ்வகையான செயற்பாட்டில் நாம் இறங்கவில்லை, பாரதியும் இருட்டடிப்புக்குள்ளாகிவிடுவான். நாமும் தோல் சுவைத்த (அ)விவேகிகள் ஆவோம்!

ஆர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றேடியோஸ்பதி

58, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7805

சகல விதமான றேடியோ, றேடியோ கசற், மற்றும்
மின்சாரப் பொருட்களை உத்தரவாதத்துடன்
வாங்கவும் திருத்திக்கொள்ளவும் நாடுங்கள்

# RADIOSPATHY

**58, Kasthuriar Road, : : Jaffna.**

சகலவிதமான ஒலிப்பதிவு வேலைகளுக்கும்
முன்னணி ஸ்தாபனம்

---

யாழ் நகரில் - உங்கள் சகலவித தேவைகட்கும்
நவீன தொழில்நுட்பம்மிக்க

## ஏ வி. எம்ஸ் ஸ்ரூடியோ

❋ வெளிப்புறப் படப்பிடிப்புக்கள் - **Indoor - Outdoor.**

❋ மக்கள் வைபவங்கள் - **Ceremoneys.**

❋ கறுப்பு வெண்மைக்கலர்
**Black & White Colours.**

1. சகல போட்டோ கிராபி வேலைகளுக்கும் உகந்த ஸ்ரூடியோ!
2. அவசரத் தேவைக்குரிய புகைப்படங்கள்
நான்கு மணித்தியாலங்களுக்குள் வழங்கக்கூடிய துரிதம்!

வணக்கம்

**117, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LAW CENTRE

## பட்டதாரி வகுப்புக்கள் ஆரம்பம்

| | |
|---|---|
| **G. A. Q.** | 1-5-82 |
| **B. A.** | 1-5-82 |
| **M. A. Q. (Econ)** | 1-5-82 |
| **Charted Accountancy** | 1-5-82 |
| **Banking Exams** | 1-5-82 |

தொடர்பு:

**Director**
**Law Centre,**
**B. M. C. Lane,**
**JAFFNA.**

---

எமது அன்பான வாழ்த்துக்கள்!

# ஆனந்தா புத்தகசாலை

**266, K. K. S. வீதி, யாழ்ப்பாணம்.**

தொலைபேசி: 348

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org